உ
சிவமயம்

Registered as a Newspaper in Ceylon
P. M. G. NO. H. A. 59/300 of 1939.

# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889) ஆவணிமாதம் 28-ம் திகதி ஆரம்பமானது

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிள வேனிலும் மூசு வண்டறை பொய்கையும் போன்றதே ஈசனெந்தை யிணையடி நீழலே

புத். ருரு | யாழ்ப்பாணம்:—சுபானு வஹ ஆடிமீ ௩௨ (1943 ஜுலைமீ 19 திங்கட்கிழமை) [இல. உகூ

## பிள்ளை கடத்திய வழக்கு

### எதிரிக்கு ரூபா 150 அபராதம்

சென்ற பங்குனிமாசம் முதலாந் திகதி வரையில் யாழ்ப்பாணம் சம்பத்திரிசியார் கல்லூரி உபாத்தியாயர் திரு. F. C துரைசிங்கம் அவர்களின் 5½ வயதுப் பாலகனைக் கடத்தி ஒளித்ததாக யாழ்ப்பாணம் 4ம் குறுக்குத்தெரு வாசியாகிய இரத்தினம் ஆனந்த நடராசா என்னும் பெண்ணின்மீது பொலிஸாரால் தொடரப்பட்ட வழக்கு திரு. V. மாணிக்கவாசகர் முன்னிலையில முடிவுற்றது. எதிரியின் சார்பாக வேலையிலிருந்து இளைப்பாறிவரும் ரேகு அதிகாரி ஒருவரும், நகரசங்க மருத்துவிச்சியும், அடைக்கலமாதாகோவிலில வீணை வாசிப்பவரின் மனைவியும் சாட்சியங் கொடுத்தனர். விசாரணையின் பின்னர், நீதிபதி எதிரியைக் குற்றவாளியெனக் கண்டு தீர்ப்பை மறுகாலைக்குத் தவணையிட்டு வைத்தார். எதிர்தரப்பில ஏற்பட்ட வழக்கறிஞர் திரு. T. C. இராசரத்தினம் அவர்கள் எதிரிக்கு இரக்கங்காட்டுமாறு மிகவும் உருக்கமாக வாதித்தார். அடுத்தநாள் எதிரிக்கு 150 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

அத்வக்காத் திரு. A. சம்பந்தனும் வழக்கறிஞர் திரு. சாம் சபாபதியும் பொலிசாரோடு வழக்கை நடத்தினுர்கள்.

## மல்லாகம் கோயிற்பற்றில் உணவு, சுகாதாரப் பொருட்காட்சி

இம்மாதம் 25ந் திகதி தொடக்கம் சுகாதாரப் பரிசோதகர் திரு. E. தர்மலிங்கத்தால் ஒழுங்குசெய்யப்பட்ட உணவு, சுகாதாரப் பொருட்காட்சியொன்று ஏழாலை அரசினர் பாடசாலையில் நடத்தப்படும். இப்பொருட்காட்சி 25ந்திகதி மாலையில வைத்திய சுகாதாரச் சேவை டிரெக்டர் டக்றர். எஸ். எப். செல்லப்பா ஓ. பீ. இ. அவர்களாலும் 26ந் தேதி காலை விதநியாகர்த்தர் மிஸ்றர். எச். எஸ். பேறேராவாலும் முறையே திறந்துவைக்கப்படுமாம்.

## ஜனுதிபதி தேர்தலில் போட்டியிடுவார்

வாஷிங்டன் யூலை

1944ம் ஆண்டில் நடைபெறும் சேனுபதிதேர்தலில் தாமும் போட்டியிடலாமென்று மிஸ்றர். வென்டல வில்கி வியாழக்கிழமையன்று தெரிவித்தார். சென்ற ஜனுதிபதி தேர்தலில் மிஸ்றர். வில்கி மிஸ்றர். ரூஸ்வெல்டுடன் போட்டியிட்டார்.

## காந்திஜி உற்சாகம்

### ஸ்ரீமதி கஸ்தூரிபாய் கடிதம்

நாகபுரி யூலை

காந்திஜி உற்சாகமாகவும் சுகமாகவும் இருப்பதாகச் சேவாக்கிராமம் ஆசிரமத்திலுள்ள ஒரு ஸ்திரீ ஆசிரம வாசிக்கு ஸ்ரீமதி கஸ்தூரிபாய் காந்தி கடிதம் எழுதியிருக்கிறுர்.

தமது தேக சுகமும் அபிவிருத்தியடைந்திருப்பதாக அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

## யாழ்ப்பாணக்கோட்டில் சென்னை நிபுணர்

### தேச வழமை பற்றிச் சாக்ஷியம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டிற் கிளம்பிய தேசவழமைப் பிரச்சினையை யொட்டிச் சாட்சியங் கூறும் பொருட்டுச் சென்னை ஹைகோட் நியாயவாதியான திரு. கிருஷ்ண மேனன் சமுகமாயிருந்தார். மலையாளச் சட்டங்களும் வழக்கங்களும் சம்பந்தப்பட்டவரை திரு. மேனன் ஒரு நிபுணராவர்.

தேசவழமை யென்பது மலையாளத்திலிருந்து யாழ்ப்பாணத்திற் குடியேறிய மக்கள் விஷயத்தில் மாத்திரம் பொருந்துமா என்பதே குறித்த பிரச்னையாகும்.

எதிர் மனுதார்களின் சார்பாக ஏற்பட்ட திரு ஜீ. பொன்னம்பலம் குறித்த நிபுணரின் சாக்ஷியம் பதிவு செய்யப்படுவதை ஆட்சேபித்தார். இவ்வழக்கிற் கிளம்பியுள்ள பிரச்னைகள் மிஸ்றர். மேனனின் சாக்ஷியத்தோடு சம்பந்தப்பட்டவை யல்லவென்று திரு. பொன்னம்பலம் எடுத்துரைத்தார்.

மலையாளத்தில் அனுஷ்டிக்கப்படும் சட்டங்களும் வழக்கங்களும் தேசவழமையைப் போன்றவையென்பதை நிரூபித்தற்காகவே தாம் திரு மேனனின் சாட்சியத்தைக் கோரியிருப்பதாக மனுதார் பக்க வழக்கறிஞர் திரு என். நடராஜா கூறினுர்.

திரு. மேனனின் சாக்ஷியத்தைப் பதிவு செய்ய நீதிபதி அனுமதியளித்தார்.

பின்னர், மனுதார் திரு ஜி. தர்மலிங்கம் செட்டி சாக்ஷியங் கூறினுர்.

மனுதார் தரப்பு வழக்கறிஞரான திரு நடராஜா தமது கட்சியை எடுத்துரைத்தபின், ஜுலைமீ 19உ வரை விசாரணை தவணையிடப்பட்டது. மறு விசாரணையின் போது எதிர்மனுதாரின் வழக்கறிஞர் திரு. பொன்னம்பலம் தமது கட்சியை எடுத்துரைப்பார்.

## பலியிடுதலைத் தடுக்க முயற்சி

### சுதுமலை ஆலயத்திற் பெருங் கூட்டம்

சென்ற இரவு 8 மணி யளவில் சுதுமலை ஈஞ்சடி வைரவசுவாமி கோவில் திருமுன்றிலில் சுதுமலையிலும் அணித்தாகவுள்ள கிராமங்களிலுமுள்ள பல ஆடவர் மகளிர்களைக்கொண்ட ஒருபெரிய பொதுக் கூட்டம் சுதுமலை உத்தம சீவிய சங்கத்தின் ஆதரவில் நடைபெற்றது.

வழக்கறிஞர் திரு M. R. காராளசிங்க மவர்கள் தலைமை வகித்தார். மானிப்பாய் இந்துக்கல்லூரிப் பிரதமாசிரியர் திரு. V. வீரசிங்கம் B.A., J. P. அவர்களாலும் யாழ்ப்பாணக் கச்சேரிப் பிரதம லிகிதர் திரு. சி. முருகேசு அவர்களாலும் முறையே உணர்ச்சி ததும்பும் சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டன. தலைவர் முன்னுரையிலும் சொற்பொழிவுகளிலும் கோயில்களிற் கொலை செய்வதன் பாதகம் மிக நன்றாக-உருக்கமாக-எடுத்து வற்புறுத்தப்பட்டது. சுதுமலை வாசிகள் இனியேனும் அக்கோவிலிலே ஆடு கோழிகளைப் பலியிடும் வழக்கத்தைத் தவிர்ப்பார்களென்று எதிர்பார்க்கப்படுகிறது என்று கூறப்பட்டது. ஈற்றில், திரு. V. S. குமாரசுவாமி அவர்களால் சொற்பொழிவாளர்களுக்கு வாழ்த்துரை கூறப்பட்டது. தேவார பாராயணத்துடன் கூட்டம் இனிது நிறைவேறியது.

## இந்திய விடுதலைக்கு உழைக்க

### லண்டனில் புதிய சங்கம்

லண்டன் யூலை 15—

இந்திய சுதந்திரத்துக்குச் சர்வதேச அங்கீகாரம் பெறும் சங்கத்தின் முதலாவது கூட்டம் இன்று லண்டனில் நடைபெற்றபோது வாஷிங்டன் மொஸ்கோ சுங்கிங் ஆகிய நகரங்களில் கிளைச் சங்கங்களை ஸ்தாபிக்க வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது.

பல பாராளுமன்ற அங்கத்தவர்கள் அக்கூட்டத்திற் பேசினுர்கள். மிஸ்றர். எனுரின் பெவன் பேசும்போது நாஜி வெற்றியைத் தடுப்பதற்காக மாத்திரம் நாம் இந்த யுத்தத்தில் இறங்கவில்லை. ஆனுல் சில உன்னதமான லட்சியங்களை நிறைவேற்றுவதற்காகவே நாம் இப்போராட்டத்தை நடத்துகிறோம். ஏனைய தேசங்களுக்கு இருப்பதுபோன்ற உரிமை இந்தியாவுக்கும் இருக்கவே இருக்கிறது.

இந்திய மக்களுக்குச் சுதந்திரமளித்துப் பிரிட்டிஷ் அரசாங்கம் ஒரு பிரகடனம் வெளியிட வேண்டுமென்பது இந்தச்சங்கத்தின் நோக்கமாகும்.

## எட்டாவது சேனை மேலும் முன்னேறுகிறது

லண்டன் யூலை 16—

கட்டானியா சமவெளி நோக்கி பிரிட்டிஷ் எட்டாவது சேனை தொடர்ந்து முன்னேறி வருகிறதென்று சிஸிலியிலிருந்து வரும் செய்திகள் கூறுவதாக அல்ஜியேர்ஸ் செய்தியொன்று கூறுகிறது.

சிஸிலியில் நேசப்படைகள் எல்லாப்பகுதிகளிலும் முன்னேறுகின்றனவென்று அல்ஜியார்ஸ் ரேடியோ இன்று அறிவித்தது. சிஸிலியில் இதுவரை சிறைபிடிக்கப்பட்டிருக்கும் அச்சுத் துருப்புகளின் தொகை ணிக்கை பதினெட்டாயிரத்தை நெருங்கி வருகிறதென்று உத்தியோகமுறையில் அறிவிக்கப்படுகிறது. சிறைபிடிக்கப்பட்ட முதல் 12000 அச்சுத்துருப்புகளில் 8000 துருப்புகளை அமெரிக்கர் கைதிகளாக்கினர்.

சிஸிலியில் நேசநாடுகள் டாங்கிகளை இறக்கியிருக்கின்றனவென்று உத்தியோகமுறையில் அறிவிக்கப்படுகிறது.

## நாஜி 'சப்ளை' பாதைக்கு ஆபத்து

மொஸ்கோவிலிருந்துராய்ட்டரின் விசேஷ நிருபர் எழுதுவதாவது:—

ஓராலுக்கு வடகிழக்கே 75 மைல் தூரத்திலுள்ள ஷிதிரா பிரதேசத்தில் செஞ்சேனையின் வலுத்தாக்குதல் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. போர்முனையிலிருந்து இன்று கிடைத்திருக்கும் செய்திகள் கூறுகின்றன. ஸோராகினேவிலுள்ள பிரியான்ஸ்க் ஓரல் ரயில்வே பாதைக்கருகில் சில சோவியத் முன்னணி மோட்டார்ப்படைகள் இருக்கின்றன. ஓரல் போர்முனையிலுள்ள ஜெர்மன் படைகளுக்கு இப்பாதை வழியாகத்தான் 'சப்ளை'கள் செல்லவேண்டும். ஸோராகினே ஓராலுக்கு வடமேற்கே 26 மைல் தூரத்தில் இருக்கிறது.

## சிஸிலியில் மேலும் அதிக நேசதேசப் படைகள்

வடஆபிரிக்காவிலுள்ள நேசதேச இராணுவ மத்திய காரியாலயம்.

ஜுலை 16—

கட்டானியா சமவெளியைப் பயமுறுத்தும் நேசதேசப் படைகளுக்குள்ள எதிர்ப்பை வலுப்படுத்துவதற்கு அச்சு இராணுவ பீடம் நூற்றுக்கு நூறுவீதமான ஜெர்மன் துருப்புகளை ஏவி விடுவதாக அறிவிக்கப்படுகிறது. அடுத்த சிலமணி நேரத்தில் உண்டாகும் அபிவிருத்திகளின் முக்கியத்துவத்தை இருதரப்பினரும் உணருகின்றனரென்பதற்கான அறிகுறிகள் இருக்கின்றன. சிஸிலியில் பிரிட்டிஷ், அமெரிக்கப் பாரசூட் துருப்புகள் மேலும் இறக்கப்பட்டிருக்கின்றனவென்பது வியாழக்கிழமை இரவு வெளியிடப்பட்டது.

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம் சுபானுஷ
ஆடி௴ ௩௨ திங்கட்கிழமை

## புடைவை விலை குறையும் போலும்

இப்பொழுது சிலகாலமாக உணவுப்பொருளைக்காட்டிலும் மானத்தைக் காத்தற்கு இன்றியமையாததாகிய புடைவை துணி யென்னும் உடைப் பொருள்களின் பொருட்டே சனங்கள் மிகவுங் கஷ்டப்படுகின்றார்கள். இங்குள்ள மக்கள் உடுக்குந் துணியின் பொருட்டு இந்தியா யப்பான் மேலைத் தேச நாடுகளையே பெரும்பான்மையும் நம்பியிருந்தார்கள். மேனாட்டுத் துணிகளும் யப்பான் துணிகளும் யுத்தங் காரணமாக இங்கே வாராதொழிய, இந்த இலங்கை மக்கள் அயல்நாடாகிய இந்தியாவையே தாங்கள் உடுக்கும் உடையின் பொருட்டு எதிர் பார்ப்பாராயினர். இந்தியாவில் ஆக்கப்படும் புடைவை துணிகள், இந்தியாவின் உபயோகத்திற்கு மாத்திரமல்லாமல் வேற்று நாடுகளுக்கு இப்பொழுது அனுப்பப்பட்டு வருதலின் விலை அதிகப்பட்டுவிட்டமையினாலும் இந்தியாவிலிருந்து இங்கே புடைவை துணி வருதற்குப் பல கட்டுப்பாடுகள் ஏற்பட்டு விட்டமையினாலும் அந் நாட்டுத் துணிகள் இங்கு வருதல் முன்னரைக்காட்டிலுஞ் சிறு தொகையாகக் குறைந்துவிட, இங்குள்ள மக்கள் உடுக்குந் துணிக்குப் பெரிதுங் கஷ்டப்படுவாராயினர். புடைவை வியாபாரிமாரும், ஏனைய வியாபாரிமார் செய்வது போல, புடைவையின் விலையைத் தம் மனம்போனவாறு உயர்த்தி விற்கத் தலைப்பட்டனர்.

இவற்றையெல்லாம் உணர்ந்து அரசினர் புடைவை விலைக்குங் கட்டுப்பாடு விதித்தார்கள்; ஆனாற் கட்டுப்பாட்டுவிலையைக் காட்டிலும் முந்தி வியாபாரிமார் விற்றவிலை குறைவானதென்பதை ஊரவர்களும் வியாபாரிமாரும் ஈற்றில் புடைவைக் கட்டுப்பாட் டதிகாரியாகிய மிஸ்றர். உவாடியாவும் அறியலாயினர்.

இவை இங்ஙனமாக இந்தியாவிலுள்ள அதிகாரிகள் அங்கே புடைவை மிகவும் விலை கூட்டி விற்கப்படுகின்றதென்பதைக் கண்டு, நாட்டின் பல பாகங்களில், இதுகாறும் விற்று வந்த விலையைக் காட்டிலும் நூற்றுக்கு ஐம்பது விகிதம் குறைத்து விலைவிதித்துப்புடைவைகளை விற்கவேண்டுமெனக் கட்டுப்பாட்டுப் பிரமாணம் இட்டிருக்கிறார்களென அறியலானேம்; இலங்கையிலும் புடைவை வியாபாரிகளுள் தொகையில் வியாபாரஞ் செய்வோர் சில்லறையில் வியாபாரஞ் செய்வோர் என இருபாலார்களுள் சில்லறையாக வியாபாரஞ் செய்வோர்க்கு நூற்றுக்கு இருபத்தைந்து வீதமாக, இலாபம்வைத்துவிற்கலாமென்றகட்டுப்பாடு இதுகாறும் விதிக்கப்பட்டிருந்தது. இக் கட்டுப்பாடு புடைவை கொள்ளும் ஏழை மக்களுக்குக் கஷ்டத்தை விளைவிப்பதென்பதையும் புடைவை விற்குஞ் சில்லறை வியாபாரிகட்கு அதிக லாபத்தைத்தருவதென்பதையுமுணர்ந்த மிஸ்றர். உவாடியா இப்பொழுது சில்லறை வியாபாரியின் இலாபவிகிதத்தை நூற்றுக்குப் பத்தாகக்குறைத்து, நிகழும் ஒருவார காலத்தில் விற்பனவு செய்ப வேண்டுமென்று புடைவை வியாபாரிகட்குக் கட்டளை விதித்திருக்கின்றாரென அறியலானேம். ஆனதால் அடுத்தவாரம் வரையில புடைவை விலைக் கட்டுப்பாட்டின்படி ஒரு ரூபாவிற்குப் பதினைந்து சத விகிதம் லாபம் குறைந்து போகவே புடைவைகள் இப்பொழுதுள்ள விலையைக் காட்டிலும் குறைந்த விலைக்கு விற்கப்படுமெனக் காத்திருத்தலாகும்; ஆனதால் புடைவை வாங்கும் மக்கள் இன்னும் ஒருவாரம் இருவாரம் பொறுத்துப் புடைவை வாங்குதல் புத்தியாகுமென எண்ணுகின்றேம்.

---

## டோஜோ-பாமா சந்திப்பு

### ஜப்பானிய பிரதமர் டோக்கியோ திரும்பினார்

டோக்கியோ யூலை 12—

பசிபிக் பிரயாணத்திலிருந்து ஜெனரல் டோஜோ டோக்கியோ திரும்பிவிட்டார் என்று ஜப்பானிய நியூஸ் ஏஜென்ஸி அறிவிக்கிறது.

சென்ற வியாழன்று அவர் ஜாவா சென்றார் என்றும் சனிக்கிழமையன்று மணிலா சென்றார் என்றும் கூறப்படுகிறது.

சிங்கப்பூரில் அச்சு நாட்டினர் ஆதிக்கத்திலிருக்கும் பர்மிய அரசாங்கத் தலைவர் டாக்டர் பாமாவைச் சந்தித்ததாக அவர் கூறினார்.

---

## சர்வகலாசாலைப் பிரவேசப் பரீட்சை

முதன் முதலாக நடைபெற்ற உயர்தரப் பாடசாலைத் தராதரப் பரீட்சையில் இலங்கைச் சர்வகலாசாலைக்கு ஏற்பட்டிருக்கும் அனுபவத்தைக்கொண்டு சர்வகலாசாலையின் பிரவேசப் பரீட்சைக்கு ஆஜராக விரும்புகிறவர்கள் லண்டன் சர்வகலாசாலையின் மெட்ரிக்குலேஷன் பரீட்சையில் தேறியிருக்க வேண்டுமெனனும் விதியை ரத்துச்செய்யச் செனட்சபையும் கவுன்ஸிலும் முடிவுசெய்ய நேரிட்டதென்று இலங்கைச் சர்வகலாசாலையின் உப அத்தியட்சகர் டாக்டர் ஜென்னிங்ஸ் பத்திரிகைகளுக்கு வெளியிட்டிருக்கும் அறிக்கையொன்றிற் கூறுகிறார்.

இதன்படி 1944ம் வருடத்திற் சர்வகலாசாலைப் பிரவேசப பரீட்சைக்குச் சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரம் உள்ளவர்கள் அனுமதிக்கப்படுவர்.

இலக்கியப் பகுதி:

# அழகர் கிள்ளைவிடு தூது

[ க. கி. ந. ]

II

ஒருவரை ஓர் உபகாரஞ் செய்யுமாறு வேண்டும்போது, அவர் மனங்குளிர்ந்து அவ்வேண்டுகோளுக்கு இணங்கச்செய்யும் நோக்கமாக அவரைப் புகழ்ந்து பேசும் போது அவர்தம் உண்மைக்குணங்களோடு பொருத்தமாக அவருக்குப் புனைந்து சூட்டக்கூடிய பிற புகழுரைகளையும் உலகோர் கூறுவது வழக்கமன்றோ? இந்நூலில், தலைவி தான் தூதாகஅனுப்ப விரும்பும் கிளியைப் புகழ்ந்து பாராட்டும் பகுதிகள் இவ்வழக்கையே நினைவூட்டுகின்றன.

கிளியைப்பற்றிப் புராணேதிகாசங்கள் பலவற்றில் வரும் வரலாறுகளையும், நிகண்டு முதலிய நூல்களில் ஆங்காங்கு கிளிக்குக் கூறப்படும் மறுபெயர்களையும் உபயோகித்துச் சிலேடையமையக் கிளியை மிகமிக உயர்ந்ததாக்கி விடுகிறார் புலவர். சர்வம் கிளிமயம் என்று தோற்றும்படி தானும் புகழ்ந்து விடுகிறார் என்று கூறலாம். இவர் சிலேடைகளும் புனைவும் சிற்சில இடங்களில் மிக வலிந்து கொள்ளப்படுவனபோலத் தோற்றினும், பல இடங்களில் மிக்க இன்பம் பயப்பனவாகும். கவிஞரின் சமர்த்தையுங் காட்டுவனவாகும். சிலேடைகளை யெல்லாந் தொகுத்துக் காட்டப்புகின், மிக விரியுமாகலிற் சிலவற்றை மாத்திரம் ஆங்காங்குச் சுட்டிச் செல்வாம். தலைவி கிளியினைப் புகழ்ந்து கூறுவன யாவை என்று அறிவதற்குமுன், கிளிக்குக் கிள்ளையெனவும், அரியெனவும், அவந்தி எனவும், கீரம் எனவும், சுகம் எனவும், சுவாகதம் எனவும், தத்தை எனவும், வன்னி எனவும் வேறு பெயர்களும் உண்டு என்பதையும், கிளி மன்மதனுடைய தென்றலாகிய தேரை இழுக்குங் குதிரையாகவுஞ் சொல்லப்படும் என்பதையும் ஞாபகத்திற் பதித்துக்கொள்வோமாக பதித்துக் கொண்டு, தலைவி கிளியைநோக்கிக் கூறுவனவற்றை நோக்குவாம்.

"கார்கண்ட மேனிக் கடவுளின் பெயராகிய அரியென்னும் பெயரைக் கொண்டுள்ளாய்! அக்கடவுளுடைய படுக்கையான ஆலிலையின் நிறத்தையுடையாய்! 'வையம் படைக்கு மதனையுமேற்கொண்(டு) இன்பஞ்செய்யுங்கிளியரசே (இங்கு, கிளி மன்மதனுடைய வாகனமாதலால், வை அம்பு அடைக்கு மதனையும் மேற்கொண்டு என ஒருபொருளும், வையம்படைக்கும் அதனையும் மேற்கொண்டு என மற்றொரு பொருளுந் தொனித்தல் காண்க.) வேளாண்மை (மன்மதனுடைய ஆட்சி; பயிர்களை விளைத்தல்) என்னும் விளைவுக்கு நின்வார்த்தையைக் கேளாதவர் ஆர்? மன்மதனுடைய ஒற்றைச்சக்கரந்தானுமில்லாமற் செலுத்துகின்ற காற்றாகிய தேரைப் பலங்கொண்டு இழுத்துத் திரிகிற பச்சைக் குதிரையே! ஒற்றைச் சக்கரத்தோடு கூடிய வெய்யவனது (சூரியனது) தேர் ஒன்றை யிழுக்கும் பச்சைக்குதிரைகள் ஏழும் உனக்கு ஒப்பாகுமோ? அந்தக் குதிரைகள் சுற்றி வரும் செகம் முழுவதும் நீயே; ஞானதீபமும் நீயே என்று சொன்னால் அதிற் பிழையுண்டோ? முன்னாளில் உன் உருவங்கொண்ட சுகமுனிவர் எல்லாந் தாமாக இருந்தாரல்லவா? வகைவகையாக எவ்வண்ணமாய்ப் (எந்நிறத்தையுடையவாய்ப்) பறக்கும் எப்பறவையானாலும் உன் ஐவண்ணத்துள்ளே அடங்குமே. உன் மெய்முழுவதும் பச்சைநிறமாயிருந்தால், உன்னைப் பார்ப்பவர்கள் பார்வதிதேவியாரென்று கருதிவிடுவார்களென்றோ நீ மூக்குமாத்திரம் சிவந்திருக்கிறாய்? நாக்குத் தடுமாறிப் (கொன்னையாக) பேசுவோரை உலகத்தோர் தள்ளிவைத்து விடுவர்; ஆயின், உன்னை விடுபவர் ஒருவருமில்லையே. முன்பு சிவகனுடைய மனைவியருள் ஒருத்தியாகிய காந்தருவதத்தை உன் பெயருள் ஒன்றாகிய தத்தை என்பதைக் கொண்டமையினாலன்றோ மிக்க சிறப்பையடைந்தாள். சிவபிரான் பெயரையும் விஷ்ணுவின் பெயரையும் வேறு பறவைகளிடம் சொல்லுவதால் ஒரு பயனும் இல்லை. ஆயின், உன்னிடம் சொன்னாலோ நீ அவற்றைப் பயின்று பல்காலுஞ் சொல்லுவாய். கூடுவிட்டுக் கூடுபோகும் யோகி உனக்கு ஒப்பாவானோ? நீ ஓர் அன்புள்ள பெண்கொடியாகாயோ? எப்படி என்று கேட்பாயா? நீ கீரம் (அஃதாவது கிளிக்குக் கீரம் என்பதும் ஒரு பெயர்; கீரம் என்பது பாலுக்கும் பெயர்) ஆதலால், ஆடை (பாலாடை, உடை) உனக்கு உண்டல்லவா? பாடகம், காலாழி முதலிய ஆபரணங்களை நீ பூண்பாய். (கிளிக்குச் சட்டை போடுதலும், கால் விரல்களில் மோதிரம் போடுதலும் உண்டென்ப) கற்புடையாய்! (கல்லின் பக்கத்தே யுள்ளாய் என்பது ஒரு கருத்து; கற்பையுடையாய் என்பது மறு கருத்து; சிலேடை) காமனையுஞ் சேர்வாய்! (அஃதாவது மன்மதனைச் சேர்வாய் என்பது ஒரு கருத்து; கா-பூங்காவாகிய மனை-மனையைச் சேர்வாய் என்பது மற்றக்கருத்து; சிலேடை) இவற்றால் நீ பெண்ணென்று சொல்லப்படுதற்குத் தகுதியுடையை யல்லையோ? (இதனால் கிளி பெண்ணினமாகிய தன்னினத்தைச் சேர்ந்ததாகத் தலைவிமுகமன் கூறியவாறும்) துன்னிய சாயுச்சியம் என்னும் பதவி சுகரூபமாகையால், உன் பெயர் சுகமாதலான், அன்னது நின் சொரூபமல்லவோ? "வன்னி (நெருப்பு, கிளி) பரிசித்தவெல்லாம் பரிசுத்தம்" என்னும் பழமொழியை எண்ணியே நீ கோதிய பழத்தை யாவரும் எச்சிலென்றும் பாராது உண்கின்றனர். தள்ளரிய யோகங்கள் சாதியாமலே உன்னைப் போலப் பச்சைப்பிள்ளையாய் (இளங்குழந்தையாய்) வாழும் பெரியோர் ஆர்? நீயும் பாலனத்தாலே பசி தீர்ப்பாய் (பாற்சோற்றாலே உன் பசியைத் தீர்ப்பாய் என்பது கருத்து) திருமாலும் பாலனத்தாலே பசி தீர்ப்பார் (பரிபாலனத்தாலே அல்லது இரட்சித்தலாலே உலகோர் பசியைத் தீர்க்கின்றார்) ஆதலால் (சிலேடைவகையால்) நீ அவருக்கு ஒப்பாகின்றாய்! கண்பரானாலும் நடந்துவரும் பூசைதனை விட்டார் முகத்தில் விழித்திடாய் (பூசைதனை விட்டார் என்பதற்குப் பூனையை உன்மேல் விட்டவர் என்பது ஒரு கருத்து; பூஜையைச்செய்யாது விட்டவர் என்பது மற்றொரு கருத்து) பச்சை, சிவப்பு என்னும் இரண்டு நிறமும் உனக்கு இருப்பதனால், பறவைவடிவமும் புருஷவடிவமும் ஆகிய இரண்டு வடிவமுமுடைய எங்கள் கருடாழ்வானுக்கு நீ ஒப்பாவாய்! குருவைப்போ

(தொடர்ச்சி ௫-ம்பக்கம்)

# பெரியபுராணப் பெரியார் மூவர்

வித்துவான் ஆ. சிவலிங்கம், தமிழ் விரிவுரையாளர்,
சி. பா. சு. தமிழ்க் கல்லூரி, மயிலம்

பெரியபுராணத்திற் கண்ட பெரியார்களுள், மூவரைச் சிறந்தவர்களாகத் தேர்ந்தெடுத்தார் பட்டினத்தடிகளார். அம்மூவராவார் சிறுத்தொண்டர், திருநீலகண்டர், கண்ணப்பர் ஆவர். "செயற்கரிய செய்வர் பெரியர்', என வள்ளுவர் கூறியாங்கு இம்மூவர் பெரியாரும் செய்த செயற்கருஞ் செயல்கள் பட்டினத்தடிகளின் மனதைக் கவர்ந்தன போலும். அதனால் அம்மூவரையும் முறையே வைத்து, அவர்தம் செயல்போற் செய்யவல்லேன் அல்லேன் ஆதலின் நான் இறைவனுக் காளாவதெப்படி? என இரங்குகின்றார். அம்மூவர் செயல்கள் யாவை?

சிறுத்தொண்டர்: வாளால் மகவரிந்து இறைவனுக்கு ஊட்டினார்.

திருநீலகண்டர்: மனைவியின் சூளால் இளமையைத் துறந்தார்.

கண்ணப்பர்: நாளாறிற் கண்ணிடந் தப்பினார்.

இதுகொண்டு நாமறியவேண்டுவதென்ன?

உலகத்துப் பிறவிகளுள் மக்கட் பிறவியேசிறந்தது. "துறக்கப்படாத உடலை" எடுத்த நாம் செய்யவேண்டுவது, நம்மைத் தோற்றுவித்த இறையை அறிந்து அடைவதற்கு வேண்டிய செயலே. அச்செயல் யாது? அதுவே தொண்டாகும். தொண்டு செய்ய முற்படுவோர் யாவரும் தம் பொருள்களையும், தமக்குரிய உடலையும், உயிரையும் தியாகம் செய்ய முன்னிற்கவேண்டும். இன்றைய உலகில் தொண்டு செய்ய முற்பட்ட பெரியார்களைக் காணின் அது நன்கு விளங்கும். உலகில் மக்களுக்குத் தொண்டியற்ற முற்படுவோர் தம் பொருள்களைத் தியாகம் செய்தாலும் பின்னரும் பொருள்களைச் சேமித்துப் போற்றி வருவார்கள். ஆனால், இறைவனுக்குத் தொண்டியற்றுவோர் பொருளைப் பெரிதெனப் போற்றார்கள். முன்னவர் பொருளைப் போற்றித் தொண்டியற்றுவர். பொருள் போயின் தொண்டில இளைப்பர். பின்னவரோ எனின் பொருள் போயின் தொண்டிற் சிறப்பர். அன்றிப் பொருளையே பெரிதென எண்ணுவராயின அவர்தம் தொண்டு சிறவாது. இறை அருளும் கிட்டாது.

கடவுள் தொண்டர்களுக்குப் பொருள்களைமேற் பற்று இராது. பற்று இருவகைப்படும். அவை, அகப்பற்று, புறப்பற்று. அகப்பற்று தனைப் பற்றியது. புறப்பற்று, தன்னின் வேறாய மனைவி, மக்கள், பொருள் முதலியவற்றைப் பற்றியது. இவ்விருவகைப் பற்றுக்களும் இறைவனுக்குத் தொண்டியற்ற நீங்குவனவாம். இப்பற்றுக்கள் நீங்கினால் இறைவனை அடையலாம். இவ்வுண்மையினை அறிவிப்பதே மேலோர் வரலாறுகள். எங்ஙனம் என்பதைக் காண்பாம்.

சிறுத்தொண்டர் தமது ஒரே மகனைத் தாய் பிடிக்கத் தந்தையாகிய தாமே அரிந்து இறைவனுக்குத் தொண்டியற்றினார். இதனால் மகனைத் தியாகம் செய்தவராகின்றார். ஆக இவர்களுக்குப் புறப்பற்று நீங்கியது. இறைவனை யடைந்தார்.

திருநீலகண்டர் தமது மனைவியார் சூளுரைத்த காரணத்தால் தமது இளமையைத்துறந்து இறையருள் எய்தினார். இளமையைத் துறத்தல் ஒரு செயற்கரும் செயல். அதிலும் தமமனைவி சூளைப் பொருளென எண்ணித் துறத்தல் போற்றத்தக்கது. மனைவியால் அடையும் இன்பத்தையும் துறந்தார். ஆதலின் இவர்புறப்பற்றை (மனைவி இன்பத்தை)த் துறந்ததேயன்றி, அகப்பற்றையும் துறந்த பெரியாராகின்றார்.

கண்ணப்பர்:-குடுமிமலைச் சிவனுக்கு இரவில் காவலிருந்து, பகலில் வேட்டையாடி இறைச்சி கொண்டு சிவபூஜை நிகழ்த்தித் தொண்டுசெய்த நம் கண்ணப்பர் 6-ம் நாள் இறைவனின் கண்ணில் இரத்தம் வடியக்கண்டு, மயங்கித் தெளிந்து தனது கண்ணையிடந்து அப்பினார். இவர் செய்த இச்செயல் (கண்ணையிடந்தது) செயற்கரும் செயலாம். உலகில் கண்ணையே பெரிதெனப் போற்றுவர். "எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்" என்றார்களே தவிர வேறு உறுப்புக்களுள் ஒன்றைக் கூறினார்களில்லை. அவ்வளவு சிறந்ததாகிய கண்ணைத்துறந்த நம் அடியார் அகப்பற்றை விட்டவராகின்றார்.

ஆக இம் மூவரும் பற்றுக்களை நீக்கி இறைவனை அடைந்தவர்களாகின்றார்கள். பட்டினத்தடிகள் இம் மூவரையே சிறந்தவராக எடுத்து வியந்திருக்கின்றார். அதிலும் பெரியபுராணத்திலும், திருநீலகண்டர், கண்ணப்பர், சிறுத்தொண்டர் என முறை வைப்பு இருக்க, பட்டினத்தடிகள், சிறுத்தொண்டர், திருநீலகண்டர், கண்ணப்பர் என முறை மாற்றியதிலும் ஓர் உண்மை உண்டு.

புறப்பற்றை நீக்கிய சிறுத்தொண்டரை வியந்து அகப்பற்றை நீக்கிய மற்றையோரைப் பின்னர் வியந்துள்ளார். அன்றியும் சிறுத்தொண்டர், மனைவி பிள்ளை (சீராளன்) ஆம் இவர்களோடு சேர்ந்து மூவராகத் தொண்டியற்றினர்; திருநீலகண்டர் மனைவியோடு சேர்ந்து இருவராகத் தொண்டியற்றினர். கண்ணப்பர் தனித்து ஒருவராகத் தொண்டியற்றினர். இதனால பட்டினத்தடிகள் முறைவைப்பு போற்றத்தக்கதாக இருக்கின்றது. இனி, அவர் பாடலைக்கண்டு மகிழ்வாம்.

வாளால் மகவரிந் தூட்டவல்லே
னல்லேன்; மாதுசொன்ன
சூளால் இளமை துறக்கவல்
லேனலலேன்; தொண்டு செய்து
நாளாறிற் கண்ணிடந் தப்ப
வல்லே னல்லேன்; நான்
இனிச்சென்று
ஆளாவதெப்படியோ திருக்கா
ளத்தி யப்பனுக்கே.

வாள், வெட்டுங் கருவியாயிருக்க 'அரிந்து' என்று அடிகள் கூறியது, சிறுத்தொண்டர், ஆட்டை வெட்டி அறுப்பது போன்றின்றி, காய்கறிகளை அரிவது போன்று தமது மகனை, ஒருவித நடுக்கமும் இன்றி, மன அதிர்ச்சியும் இன்றி அரிந்தார் என அவர்தம் தொண்டின் சிறப்பை வியந்திருக்கின்றார் என்பதை விளக்குகின்றது.

இம்மூவரது தொண்டுகளும் வீரத்தொண்டுகளாக மிளிர்கின்றன.

தொண்டு வாழ்க!
தொண்டர் வாழ்க!!

—சித்தாந்தம்

# கீரிமலையில் துணிகரமான வழிக் கொள்ளை

## அந்தரவெளியில் டாக்டரின் விபரீத அனுபவம்

யாழ்ப்பாணம் யூலை 13—

இன்று மல்லாகம் பொலிஸ் கோட்டில் நீதிபதி மிஸ்றர் குணம் ஸ்பென்சர் முன்பாகக் கீரிமலைவாசிகளாகிய பி. கதிரேசு, கே. முருகேசு பொய்யிட்டிவாசிகளாகிய எம். வல்லிபுரம், பி. இரத்தினசிங்கம் முதலிய நால்வரைச் சுன்னாகம் பொலிஸ் சப்-இன்ஸ்பெக்றர் ஆஜர்செய்து கூறியதாவது:-

சென்ற ஆனிமாதம் 13ந் திகதியன்று இளவாலை வாசியாகிய டக்றர். ஏ. பொன்னையாவும் அவரது மனைவி ஞானவல்லியும் காங்கேசன் துறைப் புகையிரத நிலையத்தில் 2 மூட்டை 'எப்சம்சோல்றறை' மீட்டுக்கொண்டு இரவு 9-30 மணியளவில் மாட்டுவண்டியில வரும்போது காங்கேசன்துறைக்கும் கீரிமலைக்கும் இடையிலுள்ள ஒருவருமில்லாத தனித்த இடத்தில் ஏறக்குறைய 10 அல்லது 15பேர் ஆயுதபாணிகளாகக் கூடிநின்று வண்டியை மறித்து டக்டர் பொன்னையாவுக்கும் அவரது வண்டிக்காரனான இளையதம்பிக்கும் அடித்து டாக்டர் மனைவியின் கழுத்திற்கிடந்த தாலிக்கொடியையும் பென்டன் சங்கிலியையும் அறுத்தெடுத்ததுடன் வண்டியிலிருந்த உப்புமூட்டைகளையும் வைத்தியக் கருவிகள் நிறைந்த தோற்பெட்டியையும் கொண்டோடிவிட்டதாகத் தகவல் தெரிந்ததும் விசாரணைசெய்து சந்தேகத்தின் மீது மேற்படி எதிரிகளைக் கைது செய்தோம் என்றார்.

எதிரிகளுக்காக நியாயதுரந்தரர் டி. ஸி. இராசரெத்தினம் அனுசரணையின்பேரில் நியாயவாதி வி. ஜோசெப்பும் வழக்காளி சார்பாக சப்-இன்ஸ்பெக்றருக்கு உதவியாக நியாயதுரந்தரர் கண்ணுத்துரையும் விவாதித்தார்கள்.

நீதிபதி கோட்டில் சமூகமான சனங்களையும் நான்கு எதிரிகளையும் ஒருமிக்க நிறுத்தி டாக்டரை அழைத்து எதிரிகளைக்காட்டும்படி கேட்க டாக்டர் எதிரிகள் நால்வரையும் முறையே அடித்தவன், பறித்தவன் முதலியோரைக் காட்டினார்.

அப்பால் டாக்டர் ஏ. பொன்னையா தமது சாட்சியத்திற் குறிப்பிட்டதாவது:—

"சம்பவம் நடைபெற்ற அன்று சாயங்காலம் 6 மணியளவில் நானும் என் மனைவியும் வண்டிக்கார நாகர் இளையதம்பியுமாக மாட்டு வண்டியில் இளவாலையிலுள்ள எனது வீட்டிலிருந்து புறப்பட்டுக் காங்கேசன் துறையிலுள்ள அரியநாயகம் வீட்டுக்குச் சென்றோம். அங்கிருந்து புகையிரதநிலையத்துக்குப்போய் என் பெயருக்கு வந்திருந்த 2 மூட்டை எப்சம் சோல்றறை எடுத்துக்கொண்டு மீண்டும் அரியநாயகம் வீட்டுக்குச் சென்றுவிட்டு எமது வீட்டிற்குப் புறப்பட்டோம். வரும் வழியில் தனிமையான ஓரிடத்தில் றோட்டருகில் ஏறக்குறைய 10பேர்கள் ஆயுதபாணிகளாகக் கூடி நின்றார்கள். எமது வண்டி அவர்களைக் கடந்து அப்பாற்சென்றது. நான் வண்டியின் பின்பக்கத்திற் கால்களைத் தொங்கவிட்டுக்கொண்டிருந்தேன். அன்று நல்ல நிலாவெளிச்சம் இருந்தது. எமது வண்டி அவர்களைக் கடந்து சென்றதும், ஒரு மனிதன் உரத்த சப்தமாக இது தான் வண்டி முன்னுக்குப்போய் நிற்பாட்டுங்கள் என்றான். அந்த நேரத்தில் யாவரும் பொல்லுகளுடன் நின்றார்கள். கீழே தொங்கிய எனது காலில் ஒருவன் அடித்தான். அடித்ததும் இறங்கச்சொன்னான். (முதலாம் எதிரியைக் குறிப்புக் காட்டப்பட்டது) நான் வண்டியைவிட்டு இறங்கியதும், அதே மனிதன் இரண்டாம் முறையாகவும் எனது காலில் அடித்துவிட்டுத் தலையிலும் ஒரு அடி அடித்தான். பின்னர் என்னைக் கட்டிப்பிடித்து இழுத்தார்கள். அந்நேரத்தில் என்மனைவி இறங்கிவந்து என்னைக் கட்டிப்பிடித்தாள், கூச்சலிட்டாள். அவர்களில் இரண்டு மூன்றுபேர் அவளை இழுத்து உதறிவிட்டு என்னைப் பக்கத்திலுள்ள வெளிவளவுக்குள் இழுததுக்கொண்டு போனார்கள். அங்கு முதலாம் இரண்டாம் எதிரிகள் பக்கத்திற் பொல்லுடன் நின்றார்கள். என் கைக்கடிகாரத்தை முதலாம் எதிரி பிடுங்கினான். அப்போது எனது மனைவி தாலியைப் பிடுங்கிறான் எனச் சத்தமிட நான் திரும்பிப் பார்த்தேன். 2-ம் எதிரி என்மனைவியின் கழுத்திலிருந்த தாலியையும் கொடியையும் சங்கிலியையும் பிடுங்கினான். வண்டிக்கார இளையதம்பியின் பக்கத்திலும் 2 பேர் பொல்லுடன் நின்றார்கள். அவனுக்கும் அடிவிழுந்தது எனக்குத் தெரியும், சிறிது நேரத்திற்குட் சீழ்க்கை அடித்த சப்தம் கேட்டது. யாவரும் ஓடிப்போனார்கள். இளையதம்பி அடிக்கப்பட்டுக் கிடந்தான், நான் வண்டிக்குட் போய்ப்பார்த்தபோது 'எப்சம் சோல்ற்' இரண்டு சாக்கையும் எனது சத்திர வைத்திய சிகிச்சை செய்யும் வைத்திய சாமான்கள் நிறைந்த தோற்பெட்டியையுங் காணவில்லை, எல்லாமாக எனது பொருட்களின் பெறுமதி 1250 ரூபாவிருக்கும், நகைகள் மாத்திரம் 18 தங்கப்பவுண். மீளவும் திரும்பி நாங்கள் காங்கேசந்துறைக்குச் சென்று 'அப்போதிக்கரி'யிடம் எமது காயங்களுக்கு மருந்து கட்டிவிட்டுச் சுன்னாகம் பொலிஸ் நிலையத்திற்குச் சென்று முறைப்பாடு கொடுத்துவிட்டு வீட்டுக்குப் போனோம்.

இந்நேரத்தில் நீதிபதி அங்கு சமூகமாகியிருந்த 1-ம் 2-ம் 3-ம் எதிரிகள் களவு செய்யும் நோக்கத்துடன் சட்டவிரோதமாக ஆயுதபாணிகளாகக் கூட்டங்கூடி நின்றதாகவும் அதேநேரத்தில் அதே இடத்தில் ஆயுதபாணிகளாக நின்றதாகவும் தாலிக்கொடி பென்டனும் சங்கிலியும் 2 மூட்டை உப்பு வைத்தியக்கருவி முதலிய 1250 ரூபா பெறுமதியான சமான்களைக் களவாடியதாகவும் குற்றஞ் சாட்டினர்.

எதிரிகள் நிரபராதிகள் எனக் கூறியதின்மேல் நீதிபதி எதிரிகளைத் தனித்தனி 1000 ரூபாப் பிணையிற் போகுமாறு உத்தரவிட்டு வழக்கை வருகிற 27-ம் திகதிக்கெனத் தவணையிட்டார்.

## தேவை

தொண்டமானாறு ஐக்கியசங்கப் பண்டகசாலைக்கு ஒரு மனேசரும், விற்பனவு காரன் ஒருவரும் தேவை. மனேஜர் ரூபா 300 பிணை கட்டவேண்டும். மாதச்சம்பளம் ரூபா 30. விற்பனவு காரனின் சம்பளம் ரூபா 18. விரும்புவோர் 26-7.43 க்கு முன்னர் காரியதரிசிக்கு விண்ணப்பங்களை அனுப்பவேண்டும்.

தொண்டமானாறு, 13.7.43.
(Mis. 79. 15 & 19.7.43)

விளம்பரமின்றேல்
பெரும்பணமில்லை

# இடி முதலியவற்ருல் இறந்த யாவர்க்கும் தகனுதி கருமங்கள் செய்யும் காலம் ஆறுமாசம் அல்லது ஒருவருஷம் தானு?

சுதுமலை பிரம்மஸ்ரீ ச. பொன்னுச்சாமிக் குருக்கள் அவர்களால் "இடி முதலியவற்றினுல் இறந்தவர்க்குத் தகனுதி கருமங்கள் செய்யும் நியமம்" என்னும் விஷயமாக 5-7-43ல் இப்பத்திரிகை மூலமாக வெளிப்படுத்திய ஓர் வெளியீடு எனது பார்வைக்கெட்டியது. அது விஷயமாய் எனது மனக்கருத்தை வெளியிடுவான் வேண்டி இதனை வரைகின்றேன்.

ஷை வெளியீட்டில் குருக்களவர்கள் "இடிவீழ்ந்திறத்தல், பாம்பு கடித்திறத்தல் சுவர்வீழ்ந்திறத்தல் ஆயுதத்தினுலிறத்தல், அக்கினியில் வீழ்ந்திறத்தல்நஞ்சுண்டிறத்தல், மலையிலேறிவீழ்ந்திறத்தல்'மரத்திலேறி வீழ்ந்திறத்தல் ஆகியவைகளா லிறந்தவர்களுக்கு ஆறும் மாசத்திலாதல் ஒரு வருடத்திலாதல் புனர்த்தேக முண்டாக்கித் தகனம் செய்து அதன்பின்பே அந்தியேஷ்டி முதலிய கிரியைகள் செய்ய வேண்டும். இதற்குப் பிரமாணம்,

துன்மரண காரணந்தான் சொல்
லிடுங்கா லிடியிற்
றுணிந்து புறப்படலரவின்
மேல் விழுதல் சுவர்வீழ்
முன்மதித்து வீழ்ந்திடல் வெந்தீயி
னிடைவீழ்தல்
முனையுள்ள ஆயுதத்தின் மலை
மரத்தின் வீழ்தல்
வன்மனத்தால் விடம்பருகல் ஆகி
களாமிவற்ருல்
மரித்தவனுக் கிருமூன்று
மாசத்தி னுதல்
பின்மருவோர் வருடத்தி னுதல்
தருப்பையினுற்
பிடித்துருவம் சுகமரணம் போற்ற
கன மிபற்றே"

என்னும் செய்யுளாமெனக் காட்டுகின்றனர்.

ஆசிரியர்கள் பிரமாணங் காட்டும்போது அதனை இன்ன நூலிலுள்ளதெனக் காட்டுதலே முறையாகும். இங்கு அப்படிக் காட்டப்படாதபோதிலும் இதனைத் தேடிப் பார்த்தபோது ஆசௌச தீபிகை என்னும் நூலிலிருந்து எடுத்துச் சிறிது பாடபேதத்தோடு எழுதியதாகத் தோற்றுகிறது. இன்னும் இதே நூலில் துன் மரணங்களின் வகையைப் பற்றியும் அவை யொவ்வொன்றிற்கும் தகனுதி கருமங்கள் செய்யும் காலவெல்லையைப் பற்றியும் இதனேடடுத்த வேறு விஷயங்களைப்பற்றியும் ௬௯-ம் செய்யுள் முதல் ௪ செய்யுட்களால் விவரிக்கப்படுகின்றன.

அவற்றுள் ௬௯-ம் செய்யுளில்,

..............................................

..............................................

சிறியிடுர் துன்மரண மிருவகையா
மறிந்து
செய்திடுத லறியாது செய்
திடுத லிவற்றுள்
ஏறியிடும் மூந்தினதுட் சபிண்டர்க்
குச் சுத்தி
யெய்திடு நானத்தா லிம்மர
ணத்தோனை
மாறியிடு மமந்திரத்தாற் சூத்திரன்
போற் சுடுக
வகுத்த காலாந்தரத்திற் றருப்
பை கட்டித்தகிக்க

எனக் கூறப்படுகின்றது. அதாவது துன்மரணம் புத்திபூர்வம் (அறிந்து செய்தல்) அபுத்தி பூர்வம் (அறியாது செய்தல்) என இரு வகைப்படுமென்றும், புத்தி பூர்வத்தில் அமந்திரமாகத் தகனித்து இதற்கென விதித்த காலத்தில (ஆறு மாசம் அல்லது ஒரு வருஷம்) தருப்பை முதலிய வற்ருற் பிரதிதேக மூண்டாக்கி மந்திரக் கிரியையோடு தகனம் அந்தியேஷ்டி முதலிய கிரியைகளைச் செய்க என்பதாம்.

மேலும் ௬அ-ம் செய்யுளில்,

..............................................

..............................................

மதிமறந்து செய்திடுர் துன்மரணத்
தின் ஞாதி
வருக்கத்தோர்க் கன்றுமுதற்
பூரண வாசௌசம்
விதிவழுவா திம்மரணம் மேவி
ஞேன் றனக்கு
வேண்டிடு மூத்தா கன்மம்
விதிப்படியே புரிக
துதிமருவுஞ் சுகமரண மடைந்த
தவன்போ லெண்ணித்
தொல்புவியோர்க் காகமநூல்
சொற்ற முறையாலே

எனவும் கூறப்படுகின்றது. அதாவது ௬௯-ம் செய்புளில வகுத்தபடி அபுத்திபூர்வமாக இறந்தவருக்குச் சுகமரண மடைந்தவர்களுக்குப் போல அவ்வவ் வருணத்தவருக்கு விதிக்கப்பட்ட கால எல்லையில் விதிப்படி அபரக் கிரியைகளைச் செய்க என்பதாம்.

ஆகவே துன்மரணங்களின் பாகுபாட்டையும் அவற்றிற்கென வகுத்துச் சொல்லப்பட்ட கால எல்லைகளையும் பற்றிய ௬௯-ம் ௬அ-ம் செய்யுட்களை ஒருபுறம் ஒதுக்கி விட்டுத் "துன்மரண காரணந்தான்" என்றற் றொடக்கத்தையுடைய ௬௬-ம் செய்யுளை மாத்திரம் எடுத்துக்கொண்டு இடி முதலியவற்றினு லிறந்தவர்கட்கெல்லாம் ஆறுமாசம அல்லது ஒரு வருடத்தின் பின்பே தகனுதி கருமங்கள் செய்யவேண்டுமென்று பொதுப்பட வரைவது தாம் எடுத்துக்கொண்ட நூலுடனேயே மாறுகொளக் கூறலாயிருக்கின்றது. அன்றியும், குருக்களவர்கள் ஷை செய்யுளுக்கு இடி வீழ்ந்திறத்தல பாம்புகடித்திறத்தல் என்ற விதமாகப் பொருள்கொண்டெழுதியிருப்பது முற்றிலும் பொருத்தமற்ற உரையென்பது அச் செய்யுளையும் அந்நூலில் அதற்கெழுதிய பொழிப்புரையையும் உற்று நோக்குவார்க்குத் தெற்றெனப் புலப்படும்.

இனி, இடி முதலிய வற்ருல் இறந்த வெல்லாம் புத்திபூர்வமெனின் தனது வீட்டின்மீது இடிவிழுந்திறத்தல படுக்கையிற் பாம்புகடித் திறத்தல் முதலியவற்றைக் கொள்வதெப்படி? அத்தருணம் அவருடையபுத்தி எவ்வளவிற் றொழிற்பட முடியும். இவற்றைப் புத்திபூர்வமென்றல் முயற்கோடும் ஆகாயப் பூவும் போலாகுமன்றோ?

இன்னும் ௬௯-ம் ௬அ-ம் செய்யுட்கள் பொது விதியாகவும் ௬௬-ம் செய்யுள் சிறப்பு விதியாகவும் அமைக்கப்பட்டு இடிவீழ்ந்திறத்தல் பாம்புகடித் திறத்தல் முதலிய துன்மரணங்களுக் கெல்லாம் ஆறு மாசம் அல்லது ஒரு வருஷத்தின பின்பே தகனுதிக்கருமங்கள் செய்ய வேண்டுமெனக் கூறப்புகின் இடி வீழ்ந்திறத்தல் பாம்புகடித்திறத்தல் நெருப்பினுல் இறத்தல் விஷத்தினுல் இறத்தல் என்னுது இடியிற் றுணிந்து புறப்படல் அரவின்மேல விழுதல் தீயின்மேல் விழுதல் வன் மனத்தால் விடம் பருகல் எனப்

தொடர்ச்சி ௫-ம் பக்கம்

## வைஸ்ராய்க்குக் காந்திஜியின் கடிதம்?

### எனக்கு ஒன்மம் தெரியா தென்கிருர் ஸேர் உஸ்மான்

பெஜவடா யூலை 10—

அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியின் ஆகஸ்ட் தீர்மானத்தை வாபஸ்பெறத் தாம் தயாராக இருப்பதாகத் தெரிவித்து வைஸ்ராய்க்கு மகாத்மா காந்தி ஒரு கடிதம் எழுதியிருப்பதாகக் கூறப்படுவதுபற்றி அஸோஸியேடட்பிரஸ் நிருபர் வைஸ்ராய் நிர்வாகசபை அங்கத்தவரான ஸேர். முகம்மது உஸ்மானைக் கேட்டபொழுது ஸேர். முகம்மது அதைப்பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது. யூலை 8-ந்தேதி மாலை தான் நான் டில்லியிலிருந்து புறப்பட்டேன். அதுவரையில மேற்படி கடிதத்தைப்பற்றி எனக்கு ஒரு தகவலும் கிடையாது என்று கூறினர்.

### சென்னை சேர்ந்தார்

சென்னை யூலை 10—

ஸேர். முகம்மது உஸ்மான் இன்றுகாலை இங்குவந்து சேர்ந்தார். போஸ்ட்மாஸ்டர் ஜெனறல் ஜனுப் வ. ரஹ்மான் தந்தி இலாகா டைரக்டர் மிஸ்றர். வ. எஸ். ஜேம்ஸ் தந்தி இலாகா பிரதம சூப்பிரண்ட் மிஸ்றர் மைல்ஸ் தபால் தந்தி இலாகாவைச் சேர்ந்த இதர அதிகாரிகள் உட்படப் பல உத்தியோகஸ்தர்களும் உத்தியோகஸ்தரல்லாதாரும் ஸ்டேஷனில் அவருக்கு வரவேற்பளித்தனர்.

## மயிலிட்டி வாசிகளின் அரிசி வியாபாரம்

### கள்ளத்தனமாகக் கோண்டு வந்தவரின கஷ்டம்

யாழ்ப்பாணம் ஜுலை 13—

மல்லாகம் பொலீஸ் கோட்டில் நீதிபதி திரு. குணம் ஸ்பென்ஸர் முன்பாக மயிலிட்டி வாசிகளாகிய 1 சிவகுரு (தண்டேல்) 2 நடராசா 3 சோமசுந்தரம் 4 செல்லையா 1 சோமசுந்தரம் 6 மார்க்கண்டு முதலியவர்கள் மீது சென்ற வைகாசிமீ 9-ந் திகதியன்று கள்ளததனமாகத் துறைமுக இலாகாவிற்குத் தெரியாமல் 38 மூட்டை அரிசி 8 மூட்டை மிளகாய் மற்றும் பலசரக்குச் சாமான்கள் நிறைந்த மூட்டைகள் முதலிய 4000 ரூபாய் பெறுமதியாகிய சாமான்களை இலங்கைக் கரையில் இந்தியாவிலிருந்து இறக்க முயற்சித்ததாகக் காங்கேசன் துறைமுகக் கலெக்டரால் தொடரப்பட்ட வழக்கு இன்று விசாரணைக்கெடுத்துக்கொள்ளப்பட்டது.

கள்ளத்தனமாகக் கொண்டுவந்ததாகச் சொல்லப்படும் 4000 ரூபா பெறுமதியான சாமான்களை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர். நீதிபதி முதலாம் எதிரியாகிய தண்டேலுக்கு ரூபா 500-ம் 4 எதிரிகளுக்குத் தனித்தனி ரூபா 100-ம் அபராதம் விதித்துக் கோட்டிற்கு விஜயஞ்செய்யத் தவறிய ஆரும் எதிரிக்கு மீண்டும் கட்டளையனுப்ப உத்தரவிட்டார்.


## யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா

**134,36700**

**100** ரூபா விகிதமான **8000** பங்குகள்

பங்குப்பணங் கட்டுமுறை

மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானுல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம், 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாநோட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (இடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாகக்கொடுக்கலாம்.
இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகோள்ளலாம்

S. கனகசபை
சிறுப்பர்.

Y 164 21-11-41—20-11-43 (தி)





## சிறுபிள்ளை வைத்தியத்திலும் ஏனைய வைத்தியங்களிலும் சித்திபெற்ற சில்லாலை முத்துவைத்தியசாலை

சாதாரணமாகச் சிறுவர்களுக்கு வரும் கிரந்தி, சலதோஷம், வயிற்றோட்டம், காய்ச்சல் முதலிய நோய்களைத் தணிக்கும் ஒப்புயர்வற்ற அரிய பெரிய மருந்துகளும் நெடுநாட்பட்ட இருமல் மேகம் கிரந்தி வாதங்களை அகற்றும் அனுபவம் வாய்ந்த சிறந்த மருந்துகளும், எண்ணெய்வகைகளும் எம்மிடம் ஏராளமாயுண்டு. ஏழைகளையும் தனவந்தர்களையும் ஒரேசீராய் நடத்தும் அரசினரின் அங்கீகாரம் பெற்ற சில்லாலை முத்து வைத்தியர்.

அ. சேபஸ்தியாம்பிள்ளை. பெரியதெரு, நம். 160, மேல்வீடு, யாழ்ப்பாணம்.
(Q. 30. 11-5.43—10-8.43)

# பிரதோஷ விரத மான்மியம்

(ம. வே. தி. ச.)

(முற்றொடர்)

உமையென்னும் பார்ப்பனி இவ்வண்ணந் தயங்கி நிற்குஞ் சமயத்திலே, ஒரு கரத்திற் குடையும் மற்றைக் கரத்திற் கமண்டலமும் பரித்தவராய் ஒரு முனிவர் அத்தடாகக் கரையை அடைந்தார்; அவர் அங்கே பிள்ளைப் பாசத்தினாற் கட்டுண்டு கவலையோடு நிற்கும் உமையைக் கண்டு அவள் கொண்ட சஞ்சலத்தைத் தமது ஞானத்தினால் உணர்ந்து, அவளை நோக்கி "சந்தேகப்படுகின்ற பார்ப்பன மகளே, நீ கொண்ட சந்தேகத்தைத் தவிர்த்தி; உந்தக் குழந்தையை நீ எடுத்துக்கொண்டுபோய், பெற்ற தாய்போல் அன்புடன் வளர்ப்பையேல் உன்குடிக்கு இதனாற் பெருங் கனமையுண்டாகும்" என்று கூறி அவ்விடம் விட்டகன்றார்.

முனிவர் அங்ஙனஞ் சொல்லக் கேட்ட உமையென்பாள், தன் சஞ்சலம் நீங்கி அந்த அரசவமிசத்திற் பிறந்த குழந்தையை ஆர்வத்துடன் எடுத்துத் தனது மற்றை ஒக்கலையில் இருத்திக் கரத்தினால் அணைத்துக்கொண்டு ஏகசக்கரம் என்னும் பட்டினத்தை யடைந்தாள்; அப்பட்டினத்திலுள்ள வீடுதோறுஞ் சென்று சென்று பிச்சையெடுத்துத் தன் மக்களிருவருக்கும் அமுதூட்டி அவ்விருவரையும் நாளொரு மேனியும் பொழுதொருவண்ணமுமாக வளர்த்து வந்தாள்; உரியபிராயத்தில் தன் குழந்தைகளிருவருக்கும் பூணூலிடுதலாகிய சடங்கினையுஞ் செய்வித்தாள். அதன்பின்னர் அப்பிள்ளைகளிருவரும் தாயை இரக்கும்படி இல்லந்தோறும் அலைந்து திரியவிடாமல், தாங்களே பிராமண வீடுகள்தோறுந் தினம் தினம் போய் இரந்துகொண்டுவந்து தாய்க்கும் உதவித் தாங்களும்உண்டு வாழ்வாராயினர். பட்டினத்திலுள்ள பிராமணப்பிள்ளைகள் வேதமோதுஞ் சாலையிற் சென்று தாங்களும் கிரமமாக வேதமோதி வருவாராயினர்; காலகதியில் இருபிள்ளைகளும் வேதம், வேதாங்கம், ஆகமம், ஸ்மிருதி, புராணம், இதிகாசம் முதலிய சகல சாஸ்திரங்களையும் உத்தம குருவையடைந்து ஐயந்திரிபறக் கற்றுவருவாராயினர்.

பிள்ளைகளிருவரும் இவ்வாறு பல வழியினுந் தேர்ச்சியடைந்து வரும்போது, தாயாகிய உமையானவள் அப்பட்டினத்திலுள்ள சிவாலயத்திற்கு நாள்தோறும் சென்று ஆங்குக் கோயில்கொண்டருளியகருணாநிதியாகிய பரமேசுவரனைப் பயபக்தியோடு வழிபட்டு வருவாளாயினள். இங்ஙனம் வழிபாடு செய்துவரும் நாளில ஒருநாள் அத்திருக்கோயிலிற் சுவாமிதரிசனஞ்செய்யும்படி வந்த சாண்டில்லியர் என்னும் ஆதிசைவப்பிராமணரொருவர், தாயோடு நின்ற இளைய குழந்தையை உற்றுநோக்கிச் சிந்தித்து "அந்தோ, இறைவன் திருவிளையாட்டு இருந்தபடியென்னே! எம்பெருமான் செய்யுந் திருவிளையாடலை அரிபிரமேந்திராதி தேவரும் அறிதல்தேற்றார்" என்று கூறுதலும், அந்தப் பிராமணோத்தமர் செயலைப் பார்த்துக்கொண்டும் வாக்கைக் கேட்டுக்கொண்டும் நின்றவளாகிய உமை விரைந்து சென்று அம்மறையவருடைய அடிகளிற் பஞ்சாங்கமாக வீழ்ந்து வணங்கி எழுந்து ஒதுங்கி நின்று "மகானே, என் இளையகுழந்தையின் விருத்தாந்தம் முழுவதையும் அடியேனுக்குச் சொல்லியருளல் வேண்டும்" என இரந்தாள். சாண்டில்லியர் அவளை நோக்கி "உத்தமியே! இக்குழந்தையை நீ வளர்க்குந் தாயாகப்பெற்றமை உனது பூர்வபுண்ணிய பயனாகும். இவன் அரசிளங் குமாரனாவான்; இவனுடைய தந்தை விதர்ப்பநாட்டரசனான சத்தியரதனாவன்; அவன் பகையரசருடன் யுத்தஞ் செய்யும்போது யுத்தமுனையில் மாண்டொழிந்தான்; அதனைக்கேள்வியுற்ற அவனுடைய பட்டத்துத் தேவியும் இச்சிறுவனுடைய தாயுமாகிய சதியென்பாள் அச்சமயத்திற் கருப்பவதியாயிருந்தவள், தன் கற்பினைக்காக்க நினைத்து அரமனையை விட்டகன்று பட்டினம் நாடுகளைக் கடந்து தன்னந்தனியே காட்டுட்புகுந்து சரீர அலுப்பினால் அப்பால் நடந்து செல்லலாற்றாளாய் அங்குள்ள ஒரு தடாகக்கரையில மாநிழலில் இளைப்பாறியிருக்கும்போது இவனைப் பெற்றாள். பெற்றவள் தண்ணீர் வேட்கைமேற்பட இருக்கை விட்டெழுந்து மெல்ல மெல்ல அடிவைத்து நடந்து தடாகத்திலுள்ள நீரைத் தன் இருகைகளையுங் கோலி மொண்டு பருகுஞ்சமயத்திலே, ஒரு முதலை பற்றி இழுத்துக் குளத்துட்கொண்டுபோய் அமுக்க அவளும் மாண்டாள். அதன்பின் இக்குழந்தை தன்னந்தனியே கிடந்து அழும்பொழுதே நீ கண்டு எடுத்து நற்றாயென அன்புடன் வளர்த்து வரலாயினை" என்றார்.

அவ்வேதியர் வார்த்தையை ஆர்வத்தோடும் அற்புதத்தோடும் கேட்டுக்கொண்டு நின்ற உமை அவரை மீளவும் வணங்கி "சுவாமீ, இக்குழந்தைக்கும் பெற்றாருக்கும் இப்படியான கதிநேர்ந்தமைக்குக் காரணமென்னவென்பதை எல்லாம் அறிந்த நீங்கள் சொல்லியருளவேண்டும்" என்று விண்ணப்பஞ் செய்ய வேதியர் சொல்லுகின்றார்:-

"இந்த இளையவனுடைய தந்தையாகிய சத்தியரதனன் முற்பிறப்பில் மதுராபுரியை இராசதானியாகக் கொண்டு பாண்டிநாட்டை நீதி திறம்பாது அரசாண்டுவந்தான். அங்கு எழுந்தருளிய சோமசுந்தரக் கடவுளையும் அங்கயற்கண்ணம்மையையும் கிரமமாகவழிபடும் நியதிபூண்டவன்; இங்ஙனமாக ஒரு பிரதோஷ புண்ணிய தினத்திலே இவ்வரசன் சிவார்ச்சனை செய்துகொண்டிருக்கும்போது, சோழராசன் முதலிய பகையரசர் பாண்டிநாட்டை நோக்கிப் படையெடுத்து வருகின்றனரென்று ஒற்றர் விரைந்து சென்று சொல்ல, இந்தப் பாண்டியராசன் தான் செய்த சிவபூசையைச்செய்து முடித்தலின்றி இடையிலே விட்டெழுந்து யுத்த சன்னத்தனாகி தன் சைனியங்களைப் போர்க்குப் புறப்படும்வண்ணம் கட்டளை செய்துவிட்டுத் தானும் ஒருபெரிய தேரின் மீது ஏறிக்கொண்டு வீதிவழியே செல்வானாயினன்.

இதற்கிடையில், அரசனுடைய முதன்மந்திரியானவன், தனது அரசன் சிவபூஜையிலிருக்கிறான் அவன் செய்யும் பூசையைக் குழப்பவொண்ணாதென எண்ணங்கொண்டவனாய்ச் சேனைகள் சேனைத்தலைவர்கள் புடைசூழச்சென்று சோழனுடன் சமர் செய்து அவன் படைவலியைச் சிதைத்து அச்சோழராசனைப் பிடித்துக் கட்டிக்கொண்டு வந்து தனது அரசன் முன்னிலையில் விடுதலும், இந்தப்பாண்டியன் சிறிதும் சிந்தியானாய் எள்ளளவும் இரக்கமின்றித் தான் கையிற்கொண்ட வாளினாற் சோழராசனுடைய சிரத்தை வெட்டி வீழ்த்தினான்.

(வரும்)

## தேங்காயெண்ணெயை ஏற்றியனுப்புதல்

### தொழில்மந்திரி தலைமையில் நடைபெற்ற மகாநாடு

நேற்றுக் காலை 10 மணிக்குப் போக்குவரத்து மந்திரி திரு. ஜே. எல் கொத்தலாவலை தலைமையில் ஆரம்பமான மகாநாடொன்றில் கொழும்புத் துறைமுகத்திலிருந்து தேங்காய் எண்ணெயைக் கப்பலில் ஏற்றி அனுப்புவதற்கான வசதிகள் பற்றிய ஆலோசனைகள் விவாதிக்கப்பட்டன,

தொழில் மந்திரி திரு. ஜி. ஸி. எஸ். கொரியா · சாமான் வாங்கும் டைரெக்டர் திரு எப். லீச் ஆகியவர்களும் தேங்காய் எண்ணெய்த் தொழிலில் சம்பந்தமுள்ள ஸ்தாபனங்கள் கம்பெனிகள் ஆகியவற்றின் பிரதிநிதிகளும் மகாநாட்டுக்கு வந்திருந்தனர்.

மகாநாட்டில் கொண்டுவரப்பட்ட முக்கியமான ஆலோசனை ஹல்ட்ஸ்டோர்ப்பிலிருந்து துறைமுகத்துக்கு ஒரு குழாய் அமைப்பதாகும். துறைமுகத்திலேயே எண்ணெயை சேகரித்து வைப்பதற்கான தாங்கியொன்றை நிறுவும் ஆலோசனையும் மகாநாட்டில் கொண்டுவரப்பட்டது.

## அழகர் கிள்ளைவிடு தூது

2-ம் பக்கத் தொடர்ச்சி

லச் செபஞ் செய்வோர்க்கெல்லாம் திருவரங்கர் திருநாமத்தை உபதேசஞ்செய்வாய்! பெண்களுடைய

"சித்தங் களிகூரச் செவ்விதழில்
ஆடவர்போல்
முத்தங் கொடுக்க முகங்கோணுய்-
நித்தமவர்
செவ்விதழுன் மூக்காற் சிவந்ததோ?
உன்மூக்கில்
அவ்விதழின் சிவப்புண் டானதோ"

அச்சுதற்கும், பார்வதிக்கும், உனக்கும் பச்சைநிறம் வந்தவிதம் எந்தவிதம்? நீ அரிகீர்த்தனத்தை இடைவிடாமற் செய்வதனாற்றானோ உனக்கு நாக்குக் கூழை நாக்காயிற்று? அன்னம், குயில், வண்டு, புறா, மயில், பூவை முதலிய பறவைகளுக்கு உன் சிறப்பு வருமோ? நீ அரிதாளை விட்டு அகலாய் (அரிதாள்-அரிந்த இணைத்தாள் என்பது ஒரு கருத்து, திருமாலின் திருவடி என்பது மற்றக் கருத்து) மன்மதனால் வருந்துவோருடைய நோயைத் தீர்ப்பதற்காகவோ நீ பச்சிலை ரூபம் படைத்திருந்தாய்! மகளிருடைய மயக்கமாகிய காட்டைச் சுடுவதற்காகவோ நீ வன்னி (நெருப்பு, கிளி) என்னும் நாமம் படைத்தாய்! அம்மகளிருடைய துன்பமாகிய யானையைக் கொல்வதற்காகவோ நீ அரி வடிவங்கொண்டாய்! (அரி-சிங்கம், கிளி) விரகதாபமாகிய கொடிய படையை வெல்லுதற்காகவோ கிள்ளை (குதிரை, கிளி) வடிவெடுத்தாய்! மாதர் விசனங் கெடுவதற்காகவோ நீ சுகவடிவு (சுகம்-இன்பம், கிளி) கொண்டாய், அழகுக் கிளிப்பிள்ளாய்! தெள்ளமுதக் கிள்ளாய்! இன்பரசக் குஞ்சே! முத்தி நகர் ஏழில் ஒன்றே! (அவந்தி என்னும் ஸ்தலம்; கிளிக்கும் அப்பெயர் உண்டு) தத்தையே! ஐம்பூதத்திலொன்றே (வன்னி) ஆன படை நான்கிலொன்றே (குதிரை) மூந்துமுதலான பொருள் மூன்றில் ஒன்றே! (அரி) இருபயனில் ஒன்றே! (சுகம்) இமையே! விழியே! பருவ விழியினுறை பாவாய்!" என்றிவ்வாறு கிளியை விளித்த தலைவி இனி அழகர் சிறப்பைப் பக்திரசம் ததும்ப மிக அழகாகச் சொல்லத் தொடங்குகின்றாள்.

## திருச்சி ரேடியோ நிகழ்ச்சி

(† இசைத் தட்டு)

### செவ்வாய் யூலை 20

காலை 7-45 கீதாரம்பம் † 7-50 தமிழில் செய்திகள் 8 காலைகீதம் † 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 சிதம்பரம் ஜயராமன் பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் † 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 காரைக்குடி சங்கரி அம்மாள் வீணை 2 தமிழில் செய்திகள் 2-05 கல்வி ஒலிபரப்பு 2-30 முடிவு.

மாலை 5 காரைக்குடி சங்கரி அம்மாள் வீணை 5-45 இசைப்பயிற்சி 6 சிதம்பரம் ஜயராமன் பாட்டு 6-30 கிராமநிகழ்ச்சிகள் 7-15 ஈழம்யுத்தமும் பேச்சு 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 வானொலி வாத்யகோஷ்டி 8 மதராஸிலுள்ளபடி கும்பகோணம் ராஜமாணிக்கம்பிள்ளை வயலின் 9-15 சபிதாதேவி † 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 பள்ளுப்பாட்டு 10 இசைவேளை † 10-30 முடிவு.

### புதன் யூலை 21

காலை 7-45 கீதாரம்பம் † 7-50 தமிழில் செய்திகள் 8-15 ஆங்கிலத்தில் செய்கள் 8-30 ஆர். வி சுப்பிரமணியம் பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் † 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 ஆர் வி சுப்பிரமணியம் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 கல்வி ஒலிபரப்பு 2-30 முடிவு.

மாலை 5 எஸ் ராமச்சந்திரசாஸ்திரி புல்லாங்குழல் 5.45 இசைப்பயிற்சி 6 ஆர் சங்கரலிங்கம் பாட்டு 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 தாளமாத்ய கச்சேரி † 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 படப்பாட்டுகள் † 8 எஸ் ராமஸ்சந்திர சாஸ்திரி புல்லாங்குழல் 8-30 அமெரிக்கவாக்கு 8-45 ஆர் சங்கரலிங்கம் பாட்டு 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 வெற்றி மார்க்கம் 10 மதராஸிலுள்ளபடி துருப்புகளுக்கு 10-30 முடிவு.

### வியாழன் யூலை 22

காலை 7-45 கீதாரம்பம் † 7-50 தமிழில் செய்திகள் 8 காலை இசை † 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 எஸ் டி செல்லம் ஐயங்கார் பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் † 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 திருவீழிமிழலை என் சுப்ரமணியம்பிள்ளை வயலின் 2 தமிழில் செய்திகள் 2-05 கல்வி ஒலிபரப்பு 2.30 முடிவு.

மாலை 5 திருவீழிமிழலை என் சுப்ரமணியபிள்ளை வயலின் 5-45 இசைப்பயிற்சி 6 எஸ் டி செல்லம் ஐயங்கார் பாட்டு 6.30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 செய்தி விளக்கம் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 வானொலி வாத்யகோஷ்டி 8 காரைக்குடி சாம்பசிவஐயர் வீணை 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிலிருந்து செய்திகள் 9-45 விடுதலை பீ பீ ஸி நிகழ்ச்சி † 10 ஐரோப்பிய சங்கீதம் † 10-30 முடிவு.

## கிராமத்தில் கொள்ளைக்காரருடன் சண்டை

### மூவர் இறந்தனர்

காரச்சி யூலை

காரச்சிக்கருகில் ஒரு கிராமத்தில் கொள்ளைக்காரர்கள் சிலர் துப்பாக்கிகளுடன் நுழைந்தார்கள். கிராமவாசிகள் உடனே பெருங் கூட்டமாகக் கூடிக் கொள்ளைக்காரர்களை எதிர்த்தனர். அதன் பயனாகக் கொள்ளைக்காரரில் ஒருவனும் கிராமவாசிகளில் இருவரும் இறந்து போனார்கள்.

## இடி முதலியவற்றால் இறந்த யாவர்க்கும் தகனாதிகருமங்கள்

### செய்யுங் காலம் ஆறுமாசம் அல்லது ஒருவருஷந்தானா?

4-ம் பக்கத் தொடர்ச்சி

புத்திபூர்வப்படும் அடைச் சொற்கள் கூட்டிக் கூறவேண்டிய அவசியமின்று.

இப்படி அடைகூட்டிக் கூறிய துணையானே தற்செயலாய் (அபுத்திபூர்வம்) இவை காரணமாய் வரும் மரணங்களும் உண்டென்பதும் தொனிக்கின்றது. அன்றியும், அந்நூலிலுள்ள மொழிப்புரையிற்றானே "புத்திபூர்வமான இக்காரணங்களா லிறந்தவனுக்கு" எனக் கூறும் சொற்றொடரும் அருத்தாபத்தி நியாயத்தால் முற்கூறியதையே வலியுறுத்தா நிற்கின்றது.

எனவே, இதுகாறும் கூறியவற்றாலும் ஆசௌச விதிவிடை போன்ற இன்னுஞ்சில நூற்றுணிபுகளாலும் இடி முதலியவற்றினால் இறத்தல் ஒரோருகால் புத்திபூர்வமாய் ஏற்படினும் பெரும்பாலும் அபுத்திபூர்வமாயே சம்பவிக்கற்பாலதென்பதூஉம் அப்படி அபுத்திபூர்வமான மரணங்களிலெல்லாம் ஸ்வாவசாந்தி செய்த சுகமரணங்களுக்குப்போல அவ்வவ் வருணத்தார்க்கு விதிக்கப்பட்ட கால வெல்லைகளில் அவ்வக் கிரியைகளைச் செய்யவேண்டும் என்பதூஉம் ஆராய்ந்து கண்ட முடிபாகும். அறிஞர்கள் இதனை இன்னும் நன்கு ஆராய்ந்து சைவ உலகிற்கு சொல்விருந் தளிப்பார்களாக.

ச. சுப்பையா, ஆசிரியர்,
சங்கத்தானை, சாவகச்சேரி.

[குறிப்பு:

துர்மரணம் அடைந்தவர்களுக்குப் பரலோகசம்பந்தமான அந்தியேஷ்டி விதி

கோஸர்ப்பாம்பு க்ருசாநு யுத்த பவந
வ்யாக்ராதி வ்ருக்ஷாயுதை
ரஜ்ஜூத்பத்த வஸூரிகாசநிவிஷைர்
தஸ்யூக்ரரோகாஸ் மபி:
ரஜ்ஞாஸ்வெநச யத்ர துர்ம்ருதி
ஜூஷாம்
ஸம்பூர்ண காத்ரந்து சேத்
ஷண்மாஸாதத பாரலௌகிகவிதி:
கார்யோதவா வத்ஸராத்.

இதன்பொருள்:—மாடு பாய்ந்து, பாம்பு கடித்து, நீரில்விழுந்து, தீயிலகப்பட்டு, பெருங் காற்றிலகப்பட்டு, இடிவிழுந்து, யுத்தத்திற் புகுந்து, ஆயுதம்பட்டு, புலிமுதலிய துட்டசெந்துக்களாற் கொல்லப்பட்டு, மரம்விழுந்து, கயிற்றாற் சுருக்கிட்டு, வைசூரி வசப்பட்டு நஞ்சுண்டு, திருடராற் கொல்லப்பட்டு, பொல்லாத வியாதியாற் பிணிப்புண்டு, கல்விழுந்து, அரசனாணைப்படி தூக்கிடப்பட்டு, தற்கொலை செய்து மரணம் நேர்ந்தால் அது துர்மரணமெனப்படும். இவ்வாறு மரணமடைந்தவருக்குக் கைகால் முதலிய அங்கமனைத்துஞ் சிறிதுங் குறையாமலிருந்தால் ஆறு மாசங்களின்பின் அந்தியேஷ்டிக் கிரியை செய்யவேண்டும்.

அவ்வாறன்றி அங்கங்களிற் குறையிருந்தால் ஒருவருடங் கழிந்தபின்பே அந்தியேஷ்டிக் கிரியை செய்யவேண்டும். இதற்குப் பிரமாணம்:—

ஸர்ப்ப ரஜ்ஜு கரி வாயு வஹ்நிபி:
சஸ்த்ர வ்ருக்ஷ விஷதோய ஹஸ்திபி:
வத்ஸரத் ம்ருது மாஸபக்ஷ யோஸ்
தத்திநேது விதிருத்ரவத் பலி:

இதன் பொருள்:—பாம்பு, கயிறு, மலை, காற்று, நெருப்பு, ஆயுதம், மரம், விஷங்கலந்த நீர், யானை இவைகளால் மரணமடைந்தவர்களுக்கு ஒருவருடமாவது ஆறுமாசமாவது கழிந்தபின் மரணமடைந்த திதியில் விதிப்படி உருத்திர பலியுடன் அந்தியேஷ்டிக் கிரியை செய்க.

இவை சைவபூஷணம் என்னும் நூலிற் காணப்பட்டன.

இச்சைவ பூஷணமும் வைத்திய நாததீக்ஷிதீயம் முதலிய நூல்களுமே பெரும்பான்மையும் இக்காலத்தில் அறிஞர்களாற் கைக்கொள்ளப்படுவனவாம். துர்மரணங் காரணமாகவும் கன்மரோய் காரணமாகவும் இறந்தோருக்குக் குறித்த காலத்தில் அந்திய கருமஞ் செய்தலின்றி ஆறுமாசமேனும் ஓராண்டேனும் கழித்து அக்கருமத்தைச் செய்தலே பண்டுதொட்டு இற்றைநாள்வரை சைவ அறிஞர் கொண்ட கொள்கையுமாம். பிற்காலத்திலெழுந்ததும் மயங்கவைக்கும் இயல்புடையதுமாகிய தமிழ் ஆசௌசதீபிகை என்னும் நூலை அறிஞர்கள் பிரமாணமாகக் கைக்கொள்ளக் காணேம்.

பத்திராசிரியர்]

## சேர். பொன். இராமநாதன் உருவச்சிலை

### அரசாங்கசபை வெளியில் அமைக்க நடவடிக்கை

அரசாங்கசபைத் தலைவரின் நிர்வாகசபை சென்ற வியாழக்கிழமை கூடியபொழுதுகாலஞ்சென்ற சேர். பொன்னம்பலம் இராமநாதனின் உருவச்சிலையை அமைப்பதற்கேற்ற சில அரசாங்கசபை ஸ்தலங்கள் பற்றி ஆலோசிக்கப்பட்டது.

அரசாங்கசபை மைதானத்தில் அமைப்பதற்குக் குறித்த சிலையை உதவ இலங்கைச் சைவபரிபாலன சபை முன்வந்திருப்பதாகத் தெரிகிறது.

ஆகமொத்தம் மூன்று ஸ்தலங்கள் ஆலோசனை கூறப்பட்டன. அரசாங்கசபைக் கட்டிடத்தின் முன்புறத்தில் கடலை நோக்கியுள்ள வெளியில் இரு ஸ்தலங்கள் குறிப்பிடப்பட்டன. மற்றொரு ஸ்தலம் லோட்டஸ் வீதியிலுள்ள ஒருபக்க வாயிலாகும்.

உகந்த ஸ்தலம்

இச்சிலை வெண்கலத்தால் செய்யப்பட்டதால் அதைக் கடலுக்கெதிரே வைக்காமல் லோட்டஸ் வீதி ஸ்தலத்தில் அமைப்பது உசிதமாகுமென்று பகிரங்கப்பகுதித் தலைவர் ஆலோசனை கூறியிருப்பதாகத் தெரிகிறது. இந்த ஸ்தலத்தில் அமைக்கும் பட்சத்தில் சிலை நீடித்திருக்குமென்று அவர் கூறியதாகத் தெரிகிறது. இந்த ஸ்தலத்தைத் தெரிவு செய்வதற்கு மற்றோர் காரணமும் கூறப்பட்டிருக்கிறது. அதாவது சேர். பி. இராமநாதனின் சகோதரரான சேர். பொன்னம்பலம் அருணாசலத்தின் சிலை இருக்கும் கட்டிடத்தின் மற்றப்பக்கத்தில் இதே மாதிரி ஸ்தலத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது.

சிலையைப்பற்றி மேற்கொண்டு சில விபரங்களைச் சைவபரிபாலன சபையிடம் கோரவேண்டுமென்று சபைத்தலைவரின் நிர்வாகசபை தீர்மானித்தது.

எந்த ஸ்தலம் தக்கதென்று நிச்சயப்படுத்துமுன் ஆகஸ்ட் மாதம் 4-ந் தேதி மேற்கூறிய ஸ்தலங்களைப் பார்வையிடவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

1915-ம் ஆண்டு இலங்கையில் நடைபெற்ற கலகத்தின்போது சேர். பி. இராமநாதன் செய்த அரிய தொண்டின் ஞாபகார்த்தமாகவே இச்சிலை ஆரம்பத்தில் செய்யப்பட்டது. குறித்த கலகம் சீர்கெட்ட முறையில் அடக்கப்பட்டது பற்றி விசாரிப்பதற்கு றோயல் கொமிஷன் ஒன்றை நியமிக்கும்படி கிளர்ச்சி செய்யப்பட்டபொழுது சேர். இராமநாதன அருந்தொண்டாற்றினர்.

### தேகவியோகம்

கார்த்திகேசு - தம்பு ஆசாரி

யாழ்ப்பாணங் - காங்கேயன் துறைப் பெருந்தெருவில் வண்கிழக்கு சிவலிங்கப்புளி நிற்கும் வீட்டில் வசித்துவந்தவராகிய திரு. தம்பு ஆசாரியென்பவர் சென்ற வெள்ளிக்கிழமை (16-7-43) காலை தமது மனைவி மக்கள் சுற்றத்தார் அயலார் பிரலாபிக்க, இவ்வுலக வாழ்வை நீத்தார். இவர் ஒரு சிறந்த தொழிலாளி. இவருக்குரிய ஈமக்கடன்கள் புதல்வர்களால் விதிப்படி சிறப்பாகச் செய்யப்பட்டன. இறக்கும்போது வயசு 82. இவருடைய பிள்ளைகளுஞ் சிறந்த தொழிலாளிகள். இவரது ஆன்மா சாந்தியடைக.

(Mis. 85. 19-7-43)

## விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறையிலுள்ள யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்

இல. 1468. P.

வழக்காளிகள்:- 1. வல்லுவெட்டித் துறை சபாபதிப்பிள்ளை துரைராசாவும் 2. வல்லுவெட்டித்துறை துரைராசா பெண் சானகியம்மாவும்.

எதிராளிகள்:— 1. வல்லுவெட்டித் துறை ஐயாத்துரை மகள் இரத்தினம் மாளும் வேறு ஒன்பது பேர்களும்.

மேற்கூறிய இலக்கப் பிரிவிடல் வழக்கிற் தீர்ந்த விற்பனவுத் தீர்வைப் படியும் எனக்குக் கோட்டால் அனுப்பப்பட்ட கொம்மிஷன் அதிகாரப்படியும் 1943-ம் ஆண்டு ஆவணி மாதம் 14-ந் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணி தொடக்கம் பின்னால் விபரிக்கப்படும் ஆதனம் மூன்று துண்டுகளாகப் பின்னால் கீறப்பட்டிருக்கும் மாதிரிப் படத்தின்படி பிரிவிடப்பட்டு அவைகளில் நடுப்பெறவுள்ள 2-ம் துண்டு கையொழுங்கையாகப் பொதுப்பாவிப்புக்கு விடப்பட்டதால் அது நீங்கி 1-ம், 3-ம் துண்டுகளை அந்தந்தத் துண்டுகளில் நின்று, முதலாவதாக மதிப்புத் தொகையிலிருந்து பங்காளருக்கிடையிலும், அவர்கள் வாங்கத் தவறினால் உடனே அந்த இடத்திலேயே பிரசித்த ஏலத்திலும் என்னால் விற்கப்படும்.

ஆதனடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப்பகுதி உடுப்பிட்டிக் கோயிற்பற்று வல்லுவெட்டித்துறை வித்தனை, இது மேற்கூறிய இலக்க வழக்கில் அணைக்கப்பட்டிருக்கும் உலாந்தா மேஸ்தர் மி. ஐயாத்துரை அவர்களின் 12-ம் இலக்கப்படத்தில் 1-ம் 2-ம் துண்டுகள் நிலப்பரப்பு 1 குளி 13 14/32 எல்லை கிழக்கு வேதவனம் துரைச்சாமியின் உரிமைக்காரருக்கும் மறுபேருக்குமுடைய ஆதனமும், கிணறும் அதன் பாவிப்புக்குமாக விடப்பட்ட நிலமும், வடக்கு வழக்காளிகளுடைய ஆதனமும் துரையப்பா பெண் அழகரத்தினத்துக்குடையவாதனமும், மேற்கு ஒழுங்கை தெற்கு கையொழுங்கை,

1 மேற்சொல்லிய காணி நிலப்பரப்பு 1 குளி 13 14/32ல், 1943-ம் ஆண்டு ஆனி மாதம் 21-ந் திகதியில் 759-ம் இலக்கத்தில் என்னால் விந்தாரிக்கப்பட்ட படத்தில் வடக்குப் புறமாகவுள்ள 1-ம் துண்டுக்குளி 11 30/32. எல்லை கிழக்கு கிணறும் அதன் பாவிப்புக்குமாக விடப்பட்ட நிலம், வடக்கு வழக்காளிகளுக்குடைய வாதனமும், துரையப்பா பெண் அழகரத்தினத்துக்குடையவாதனமும், மேற்கு ஒழுங்கை, தெற்கு கையொழுங்கைக்காக விடப்பட்ட குறித்த படத்தில் 2-ம் துண்டு இது முழுவதும். நிலத்தின் விலைமதிப்பு ரூபாய் 330 முன்னூற்று முப்பது. வீட்டின் விலைமதிப்பு ரூபாய் 40 நாற்பது. கூடியதொகை ரூபாய் 370 முன்னூற்றி எழுபது.

2 மேற்சொல்லிய 759-ம் இலக்கப் படத்தில் 3-ம் துண்டுக் குளி 16, எல்லை கிழக்கு வேதவனம் துரைசாமியின் உரிமைக்காரருக்கும் மறுபேருக்குமுடைய வாதனம், வடக்கு கையொழுங்கைக்காக விடப்பட்ட குறித்த படத்தில் 2-ம் துண்டு, மேற்கு ஒழுங்கை, தெற்கு கையொழுங்கை. இதுமுழுவதும் நிலத்தின் விலை மதிப்பு ரூபா 445 நானூற்றுநாற்பத்தைந்து. கொட்டி

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் வண்மேற்கு மிஸ்கீன் செய்யது அகமது மாக்காயர் வழக்காளி

இல. 430

எதிராக

யாழ்ப்பாணம் சோனகதெரு இறந்துபோனார் 1. யூசுப் செயினு மகமதுவும், பெண் 2. உம்மாங்கனி, 3. செயினு மகமது, மகமது சுளுத்தானும் பெண், 4. சுலைகா உம்மா, 5. சின்னத்தம்பி மலிக்க சாய்பு பெண் கச்சி மொய்தீன் நாச்சியார், 6. செயினு அப்பா மொய்தீன் சாய்பு, 7. மாதாம் சாய்பு முகம்மது அப்பா எதிராளிகள்.

2ம் எதிரி தொடக்கம் 5ம் எதிரிமட்டும்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் மேற்குறித்த வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1943ம் ஞு ஆவணிமீ 14ம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை ரூபா 1205 இன்னும்ரூபா250. 1943ம்ஆண்டு தைமாதம் 22ந்திகதிதொடக்கம் தீர்வைமட்டுக்கும் ஞு 1-க்கு 100-க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத் தொகைக்கும் வருஷம் 1-க்கு 100க்கு 9 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 181-22½ சதமும்.


காணியின் விபரம்

வண்மேற்கு இறை பட்டியிட்டபுலம் நாவலடியும் பிச்சிக்குளத்தலமடையும் பரப்பு இளா 1¼ கல்வீடும்கிணறும் செய்பயிர்களும் எல்லை கிழக்கும், வடக்கும், ஒழுங்கை; மேற்கு மீராமுகையதீன் பெண் மவுனு உம்மாவின் உரிமைக்காரரும் மறுபேரும், தெற்கு, கச்சியார் பெண் கப்பா உம்மாவும் பங்காளரும், செயினு முகமது பெண் மைமூனு உம்மாவின் ஆதனமும் இது அடங்கலும்.

K. பொன்னப்பா,
வெந்திஸ்மேஸ்தரும், கொம்மிஷனரும்.
(Licensed Autioneer & Commissioner)

இணுவில் 19-7-43
Mis 84 19—7—43.

லின் விலை மதிப்பு ரூபாய் 20, கூடிய தொகை ரூபாய் 465.




மா. வேலுப்பிள்ளை
உலாந்தா மேஸ்தர்&கொம்மிஷனர்,
புலோலி கிழக்கு,
பருத்தித்துறை, 23.6.43
(Mis. 82. 19.7.43)

குறைந்த விலையில் துணிகள்
வேஷ்டித்துணிகள், துவாய்கள் பஞ்சாலும் பட்டாலும் ஆகிய சேலைகள் முதலியவை.
R. S. M. டெக்ஸ்டைல் ஸ்ரோர்ஸ்
மொத்தத்துக்கும் சில்லறைக்கும் விற்கும் வியாபாரிகள்
பெரியகடை—யாழ்ப்பாணம்.
K. A. இரத்தினசிங்கம்,
பங்காளர்.
Y 19. 4-3-42—3-3-44

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகோள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Monday 19, July, 1943.